

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (5.9.2023) தலைமைச் செயலகத்தில், எழுத்தாளர் இமையம், ஏ.ஜி.பாலமுருகன், பாண்டிமதி துரைராஜ் ஆகியோர் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி அமெரிக்க நாட்டின் நியூஜெர்ஸி மாநிலத்தில் உள்ள ஃபிராங்கிளின் நகரியத்தின் வாழ்த்துப் பிரகடனத்தை (New Jersey, Franklin Township Proclamation) அளித்தார்கள்.

### அரியலூர் மாவட்டத்தில் ரூ.2.70 கோடியில்

# புதிய ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையக் கட்டிடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்!

அரியலூர், செப். 6 –

அரியலூர் மாவட்டத்தில் ரூ.2.70 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையக் கட்டிடத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டம், வாலாஜா நகரத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பில் புதிதாக கட்டப்பட்ட ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையக் கட்டிடத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து வாலாஜாநகரத்தில் உள்ள ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையக் கட்டிடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் குத்து விளக்கேற்றினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகி யோர் முன்னிலையில் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரத்தில் ரூ.2.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையக் கட்டிடத்தினை முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக் காட்சி வாயிலாக இன்றைய தினம் திறந்து வைத்தார்கள்.

பின்னர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையக் கட்டிடத்தில் குத்து விளக்கேற்றினார். தொடர்ந்து வேளாண் பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திர மயமாக்கல் உப இயக்கத்திட்டத்தின் கீழ் விவசாயி களுக்கு 104 பவர் டில்லர்கள் ரூ.88.40 இலட்சம் மதிப்பீட்டிலும், 04 பவர் வீடர்கள் ரூ.1.44 இலட்சம் மதிப்பீட்டிலும் என ஆக மொத்தம் 108 விவசாயிகளுக்கு ரூ.89.84 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும், புதிதாக திறக்கப்பட்ட வேளாண் விரிவாக்க மையக் கட்டிடத்தின் மூலம் விவசாயிகளுக்கு வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்து எடுத்துரைப்பதுடன் விவசாயி கள் மற்றும் வேளாண் அலுவலர்களுக்கு பயிற்சியும் அளிக்கப் படும். எனவே, இதனை விவசாயிகள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் (பொ). பழனிசாமி, வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் குமாரகணேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் கோ. அறிவழகன், மா. அன்பழகன், நகர செயலாளர் இரா. முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் வாலாஜாநகரம் ஊராட்சி மன்றத் தலைவர் அபிநயா மற்றும் அரசு அலுவலர்கள், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மோடியின் பேச்சும், அவரின் செயல்பாடும் சம்பந்தமில்லாதவை!

# பொய் சொல்லி நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது!

## “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் சூளுரை!

சென்னை, செப். 6 –

மோடியின் பேச்சும் அவரின் செயல்பாடு சம்பந்தமில்லை. எனவும் இனி பொய் சொல்லி நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது. வரும் தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்துவோம் என சூளுரைத்துள்ளது.



தினகரன்

செப்டம்பர் 5, 2023 செவ்வாய்க்கிழமை

ஏமாற்ற முடியாது

'வஞ்சிக்கும் பாஜவை வீழ்த்துவோம், இந்தியாவை மீட்டெடுப்போம்' என்ற தலைப்பில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசும் 'ஸ்பீக்கிங் பார் இந்தியா' ஆடியோ சீரிஸ் நேற்று வெளியானது. இதில், ஒன்றிய அரசின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை ஆதாரப்பூர்வமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வைத்துள்ளார். முக்கியமாக, மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டி வருகிறது. தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு மிக குறைவு என்பதுதான் வேதனைக்குரியது. ஒன்றிய அரசின் பேச்சும், அவர்களின் செயல்பாடும் எவ்வித சம்பந்தமும் இல்லாமல் இருக்கிறது. நாட்டில் அனைத்து மாநிலங்களுக்கும் பாரபட்சம் இல்லாமல் நிதியை ஒதுக்குகிறோம் என்று கூறி விட்டு, பாஜ ஆளக்கூடிய மாநிலங்

அது வருமாறு:

'வஞ்சிக்கும் பாஜவை வீழ்த்துவோம், இந்தியாவை மீட்டெடுப்போம்' என்ற தலைப்பில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசும் 'ஸ்பீக்கிங் பார் இந்தியா' ஆடியோ சீரிஸ் நேற்று வெளியானது. இதில், ஒன்றிய அரசின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை ஆதாரப்பூர்வமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வைத்துள்ளார். முக்கியமாக, மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டி வருகிறது. தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு மிக குறைவு என்பதுதான் வேதனைக்குரியது. ஒன்றிய அரசின் பேச்சும், அவர்களின் செயல்பாடும் எவ்வித சம்பந்தமும் இல்லாமல் இருக்கிறது.

நாட்டில் அனைத்து மாநிலங்களுக்கும் பாரபட்சம் இல்லாமல் நிதியை ஒதுக்குகிறோம் என்று கூறி விட்டு, பாஜ ஆளக்கூடிய மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்குவதை ஒன்றிய அரசு வாடிக்கையாக வைத்துள்ளது. அனைத்து மாநிலங்களும் வளர்ச்சி அடைந்தால் தான் நாடு வல்லரசு என்ற இலக்கை அடைய முடியும் என்பதை ஒன்றிய அரசு புரிந்து கொள்ள வேண்டும். நாடாளுமன்ற தேர்தலின் போது ஒன்றிய அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. சாதனைகளை சொல்லி நாட்டு மக்களிடம் வாக்கு கேட்க ஒன்றிய அரசு பயப்படுகிறது.

தங்கள் ஆட்சியில் மக்கள் செழிப்பாக உள்ளதாக ஒன்றிய அமைச்சர்கள் அவ்வப்போது கூறி வருகின்றனர். ஆனால், உண்மையில் நிலைமை தலைகீழாக உள்ளது தான் வேதனைக்குரியது. 'நாங்கள் நன்றாக இருக்கிறோம்' என நாட்டு மக்கள் சொல்லவில்லை என்பதை ஒன்றிய அரசு தெரிந்து கொள்ள வேண்டும். பாஜ ஆளக்கூடிய மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தும், அம் மாநிலங்களால் சிறப்பு மிக்க திட்டங்களை கொண்டு வர முடியவில்லை. ஆனால், மிக குறைவான நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கினாலும், தமிழ்நாடு அரசின் முயற்சியால் நாடே போற்றும் வகையில் பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டகூடாது. இதனால் மாநிலங்களின் வளர்ச்சி பாதிக்கப்படும். முக்கி யத்துவம் வாய்ந்த திட்டங்களை கொண்டு வருவதில் காலதாமதம் ஏற்படும். இதனால் மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். நாட்டில் அனைத்து மாநிலங்களையும் சரிசமமாக பார்ப்பதாக கூறி விட்டு, தங்கள் கட்சி ஆளக்கூடிய மாநிலங்களுக்கு முன்னுரிமை அளிப்பது உள்ளிட்ட விஷயங்களில் ஒன்றிய அரசு இறங்குவது நல்லதல்ல. குறிப்பாக, பாஜ ஆளாத மாநிலங்களுக்கு பல்வேறு வகையில் ஒன்றிய அரசு நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது. இதை நாட்டு மக்கள் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர். ஒன்றிய அரசின் ஒவ்வொரு செயல்பாடுகளையும் மக்கள் பார்த்து வருகின்றனர். எனவே மக்களை ஒன்றிய அரசால் ஏமாற்ற முடியாது.

கடந்த காலங்களில் தேர்தல் நேரத்தில் ஒன்றிய அரசால் நடத்தப்பட்ட நாடகங்களை மக்கள் பார்த்துள்ளனர். செய்ய முடியாத திட்டங்களை ஒன்றிய அரசு அறிவித்து பொதுமக்களை ஏமாற்றியதை இன்னும் அவர்கள் மறந்து விடவில்லை. இனி, மக்களை ஏமாற்ற முடியாது என்பது ஒன்றிய அரசுக்கு நன்றாக தெரிந்து விட்டது. ஆகையால், வரும் நாடாளுமன்ற தேர்தலில் ஒன்றிய அரசு பல தில்லாலங்கடி வேலைகளில் இறங்கினாலும் ஆச்சரியமில்லை. பாஜ அரசு ஆட்சிக்கு வந்து 10 ஆண்டுகள் ஆகப்போகிறது. தாங்கள் செய்த திட்டங்களை சொல்லி வாக்கு கேட்க முடியாத நிலையில் ஒன்றிய அரசு உள்ளது. நாட்டுமக்கள் தெளிவாக உள்ளனர். பல்வேறு விஷயங்களில் ஒன்றிய அரசு செயல்பட்ட விதத்தை அவர்கள் மறந்து விடவில்லை. பொய்களை சொல்லி நாட்டுமக்களை ஒரு போதும் ஒன்றிய அரசால், இனி ஏமாற்ற முடியாது.

இவ்வாறு “தினகரன்” தலையங்கத்தில் சூளுரைத்துள்ளது.




கழகத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் தலைமையில் அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் துணைச் செயலாளர்கள் பி.டி.சி.வெ.பாலு, ராஜா குப்புசாமி, ஆர்.வரதன், கொல்லாபுரம் ராஜேந்திரன், ராஜகாந்தன், சேலம் காசி, கோவை தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இதுவரை ரூ.5 கோடியே 77 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் மருத்துவம் - கல்வி உதவி நிதியாக

# இன்று ரூ.8,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 5 கோடியே 77 லட்சத்து 90 ஆயிரம்**. தற்போது நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் 32 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.8,00,000 /-** (எட்டு லட்சம்) **05-09-2023** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | விஜயபாண்டியன், ஜீவா நகர் 1வது தெரு, மதுரை 625 011 | 25,000/– |
| 2. | எஸ்.சி.சந்திரன், செம்மாண்டபாளையம் கிளைச் செயலாளர், ஈரோடு தெற்கு | 25,000/– |
| 3. | ஏ.மணி, வேளூர் அஞ்சல், திருத்துறைப்பூண்டி, திருவாரூர் 614 715. | 25,000/– |
| 4. | ஜி. ரமேஷ், சித்திபுத்தி விநாயகர் கோவில் தெரு, கடம்பத்தூர், திருவள்ளூர் | 25,000/– |
| 5. | எம். ஞானராஜ், ஒன்றிய பிரதிநிதி, பெட்டைக்குளம், திருநெல்வேலி கிழக்கு. | 25,000/– |
| 6. | எம். ராமர், வேப்பங்குளம் கிளைச் செயலாளர்,குருவிகுளம், தென்காசி வடக்கு. | 25,000/– |
| 7. | பி. ராமசாமி, கிளைச் செயலாளர் எ.பாதர்பேட்டை, துறையூர், திருச்சி | 25,000/– |
| 8. | எஸ்.குழந்தைவேலு, பட்டிமார், கோட்டூர், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் | 25,000/– |
| 9. | நா.தங்கம்மாள், பகளவாடி, காமாட்சி கோவில் தெரு, துறையூர், திருச்சி | 25,000/– |
| 10. | எஸ்.வீரப்பன், 17வது வார்டு செயலாளர், பள்ளிபாளையம், நாமக்கல் | 25,000/– |
| 11. | கா.காணப்பன், மேல் தெரு, மெணசி அஞ்சல், பாப்பிரெட்டிபட்டி, தருமபுரி | 25,000/– |
| 12. | ஜே.ஜாகீர்உசேன், கணேஷா காலனி, கெலமங்கலம், கிருஷ்ணகிரி | 25,000/– |
| 13. | சி. பொன்னிங்கிரி, குப்புசாமி வீதி, கள்ளிமடை, சிங்காநல்லூர், கோவை | 25,000/– |
| 14. | எஸ்.ரவி, மன்னாதம்பாளையம், மொடக்குறிச்சி, ஈரோடு | 25,000/– |
| 15. | எஸ்.ராஜம்மாள், ராஜவீதி, அரசூர், சத்தியமங்கலம், ஈரோடு | 25,000/– |
| 16. | அ.கா. அன்வர்கான், கந்தசாமி வீதி, ஈரோடு | 25,000/– |
| 17. | கே.செல்வராஜ், காளிபாளையம், தாராபுரம் தாலுகா, திருப்பூர் | 25,000/– |
| 18. | என்.ராஜேந்திரன், தவிட்டுமேடு, கோத்தகிரி, நீலகிரி மாவட்டம் | 25,000/– |
| 19. | இரா.திராவிடமணி, ஒலிமடவு கிராமம், கொளப்பள்ளி, பந்தலூர், நீலகிரி | 25,000/– |
| 20. | க.சரோஜா, நத்தம் காலனி ரோடு, பந்தலூர் அஞ்சல், நீலகிரி | 25,000/– |
| 21. | ஏ. கிட்ணசாமி, நெல்லியாளம் தேயிலை தோட்டம், கொளப்பள்ளி, நீலகிரி | 25,000/– |
| 22. | பி. ரவி, எண்.6/10, மசக்கல் மற்றும் அஞ்சல், நீலகிரி | 25,000/– |
| 23. | வி.மனோகரன், கிளை அவைத்தலைவர், ஏர்குடிஅச்சம்பத்து,மதுரை | 25,000/– |
| 24. | ம.கருப்பையா (எ) கலைப்பித்தன், வ.உ.சி.நகர், திருப்பாலை, மதுரை14. | 25,000/– |
| 25. | பெரியகருப்பன், மேலப்பூசனூத்து, கடமலைமயிலாடும்பாறை,தேனி | 25,000/– |
| 26. | ஆர்.வெள்ளத்துரைபாண்டியன்,5வது வார்டு, சின்ன ஓவுலாபுரம்,தேனி. | 25,000/– |
| 27. | டபிள்யூ. சர்மாவில்லியம், முருகப்பா நகர், சூளைமேடு,சென்னை94. | 25,000/– |
| 28. | சே.நவாஸ்அலி, காயிதே மில்லத் நகர், புதுவலசை,இராமநாதபுரம் | 25,000/– |
| 29. | க.கர்ணன், கிளைச் செயலாளர், விரதக்குளம், கமுதி, இராமநாதபுரம் | 25,000/– |
| 30. | வி.ஆர்.அலர்மேல்மங்கை, பேரண்டம்மாள் தெரு, சிவகாசி,விருதுநகர் | 25,000/– |
| 31. | கு.க.கோட்டியப்பன், நேத்தாஜி நகர், சங்கரன் கோவில்,தென்காசி | 25,000/– |
| 32. | அ.கல்வத்பீவீ, ஆலீம்ஷா தெரு, தெற்குபகுதி, கடையநல்லூர்,தென்காசி | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.8,00,000/-** |